**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 06-04-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-04-06 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-04-07 | 2023-04-08 | 2023-04-09 | 2023-04-10 | 2023-04-11 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 36.0 | 36.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 28.0 | 28.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 8 | 4 | 6 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 320 | 270 | 270 | 320 | 320 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 6 | 1 | 0 | 0 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் வறண்ட வானிலையாக காணப்படலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 4.0-8.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும்; காற்றின் திசையானது மேற்கு முதல் வடமேற்கு நோக்கி வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 35.0°C-34.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 27.0°C-28.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 80-90%-ஆகவும் மற்றும் மாலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 40%-ஆகவும் காணப்படலாம்.

## பொது ஆலோசனை:

09.04.2023 முதல் 15.04.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையை விட அதிகமாகவும் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையை விட சற்று குறைவாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலையானது எதிர்பார்க்கப்பட்ட இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

விவசாயிகள் கோடை உழவு தொடங்குவதன் மூலம் மண் நீர் பிடிப்பு திறன் மேம்படும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | பூ பூக்கும் நிலை முதல் நெற்கதிர் பால் பிடிக்கும் நிலை- 1. தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 2.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.இலைக் கருகல் நோய்- நடவுக்கு மேற்கொண்ட 30 & 45 நாட்களுக்குள் இந்நோயின் அறிகுறி தென்பட்டால் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிலோ கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் கலவை @ 300 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 500 கிலோ கலவையினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் மேலும் தேவைக்கேற்ப 15 நாட்கள் இடைவெளியில் மறு தெளிப்பினை மேற்கொள்ளலாம்; 4.நெற்பழம்- ஏக்கருக்கு ப்ரோபிகோனாசால் 25 EC @ 200 மி.லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது 50% பூ பூக்கும் தருணம் மற்றும் தண்டு உருள் கதிர் வரும் பருவத்தில் ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைட் 77 WP @ 500 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 5.கதிர் நாவாய்ப்பூச்சி- ஒரு ஏக்கருக்கு வேப்பங்கொட்டைச்சாறு 5% தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது ஒரு ஏக்கருக்கு மாலதியன் 50 EC 200 மிலி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| உளுந்து | 1.புள்ளிகாய்த் துளைப்பான்- ஏக்கருக்கு தியோடிகார்ப் 75% WP 250g என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 2.மஞ்சள் தேமல் நோய்- ஏக்கருக்கு மெத்தில் டெமெட்டான் 25 EC 200 மில்லி லிட்டர் என்ற வீதம் அல்லது தியாமேதாக்சாம் 75 WG 40 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| கரும்பு | இளங்குருத்துப் புழு- ஏக்கருக்கு தியாமேதாக்சாம்75% w/w SG 64 கிராம் அல்லது ஏக்கருக்கு கிளோரன்டிரானிலிப்ரோல் 18.5 % SC150 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | 1.புகையிலை வெட்டுப்புழு- 1. ஏக்கருக்கு வேப்ப எண்ணெய் (2%) 8 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் அல்லது குயினல்பாஸ் 25 EC 300 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். மற்றும் விளக்குப் பொறி அமைத்து அந்துப்பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம்; 2.பின் பருவ இலைப்புள்ளி- ஏக்கருக்கு ஹெக்ஸகோனசோல் 5% EC 600 மில்லி லிட்டர் அல்லது ஏக்கருக்கு ப்ரோபிகோனசோல் 25% EC 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | இலைப்பேன்- இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.மஞ்சள் முரனைச் சிலந்தி- புப்ரோஃபெசின் 25 SC 10 லிட்டர் தண்ணீருக்கு 8.0 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 SG 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | 1.வெள்ளை ஈ- வேப்பண்ணெய் 3 சதம் என்றளவில் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது தியாமேதோக்சாம் 25% WG 10 லிட்டர் தண்ணீருக்கு 4 கிராம் வீதம் கலந்து தெளிக்கலாம். ஏக்கருக்கு 5 முதல் 6 எண்ணிக்கையிலான மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியினை அமைக்கலாம்; 2.சிற்றிலை அல்லது சிறு இலை நோய்- டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம். |
| மாம்பழம் | தத்துப்பூச்சி- தியாமெதோக்சம் 25WG 10 லிட்டர் தண்ணீருக்கு 1.0 கிராம் வீதம் அல்லது புப்ரோஃபெசின் 25 SC 1 லிட்டர் தண்ணீருக்கு 1.0 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கலாம். மற்றும் வேப்பெண்ணைய் 1 லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி லிட்டர் வீதம் கலந்து மேற்கொண்ட பூச்சி கொல்லி மருந்துடன் கலந்து தெளிக்கலாம். பூக்கள் பூக்க தொடங்கியவுடன் முதல் தெளிப்பும் இரு வார இடைவெளிக்கு பின் இரண்டாம் தெளிப்பினை மேற்கொண்டு தத்துப்பூச்சி தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம். |